காலத்திற்கு ஏற்ற
இறக்குமதிசெய்யப்பட்ட
பல பொருட்கள்
தாராளமாகக் கிடைக்கும்
- மணிக்கூடுகள்
- கசெட் றேடியோக்கள்
- 3 விசை மிக்சர்
- காப்பி கிறைண்டர்
- எலெக்ரோனிக் கருவிகள்

சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் – போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 7 ஜுல்ஹஜ்: 21 இதழ்: 155
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24 10-78

PERIODICALS
RECEIVED

ரொஷிபா
குளிர்சாதனப் பெட்டிகள்,
மின் விசிறிகள்.
சர்வதேச தரத்திலானது
உங்கள் இல்லங்களுக்கு
அவசியம் தேவை.
சிறிதளவே கையிருப்பில் உண்டு.
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284.

# பதவியைத் துறக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்!

## வவனியா எம். பி. அறிக்கை



(வவனியா)

**வவனியா தொகுதியை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளையும் தீர்த்து வைக்க முடியாதநிலையில் அத்தொகுதியின் பிரதிநிதியாக இருப்பதிலும் பார்க்க, பதவியைத் துறந்து சாதாரண பொதுமக்களுடன் இணைந்து இன்னல்களை எதிர்கொள்ளவேண்டியநிலைக்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாக வவனியாத் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியிருக்கின்றார்.**

எல்லைப் பிரதேசம் காக்கப்படுவதற்கான எந்தவித திட்டமோ, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளோ தமிழர் விடுதலைக் கூட்டணியால் மேற்கொள்ளப்படவில்லையென்றும் தாமும் தமது தொகுதி மக்களும் மாத்திரம் பிரதேசத்தைக் காப்பாற்றவேண்டும் என சிந்திப்பதில் அர்த்தமில்லையென்றும் அவர் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

திரு. தா. சிவசிதம்பரம் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:

"வவனியா தொகுதி பல இனமக்கள் வாழ்கின்றஎல்லைத் தொகுதி. கடந்த ஆகஸ்ட்கலவரத்தின் பின், பல பழம்பெரும் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் சொத்து, உடைமை அத்தனையையும் இழந்து தங்கள் கிராமத்தையே விட்டு வெளியேறி இன்று வரை தங்கள் கிராமங்களுக்கு திரும்பிப் போகமுடியாத நிலையில் தவிக்கின்றார்கள்.

"பதவியா எல்லைப்பிரதேசத்தையடுத்து ஆயிரக்கணக்கான ஏக்கர் வவனியாதொகுதியின் நிலமும், குளங்களும் சிங்கள மக்களால் சுவீகரிக்கப்படுகின்றன. குளங்கள் திருத்தப்படுகின்றன. —தமிழ்ச் சைவக் கிராமங்களின் மத்தியில் வவனியாப் பட்டணத்தை அடுத்துள்ள பழம்பெருமை வாய்ந்த சைவ ஆலயம் பறிக்கப்படுகின்றது. —இராணுவ முகாம் என்ற போர்வையில் ஏழை விவசாயிகளின் சொந்த நெல் விளையும் நீர்ப்பாய்ச்சல் நிலம் பறிக்கப்படுகின்றது. விமானத்தளம் புனரமைப்பு என்ற பெயரில் பட்டண எல்லைக்குள் தனியாரின் காணிகள், வீடுகள் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மலையகத்தில் இருந்து அகதிகளாக இங்கு வந்து குடிசை கட்டி, வாழ்ந்து வருகின்றமக்களின் நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு துரித நடவடிக்கைமேற்கொள்ளப்படுகின்றது.

எல்லைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் கூடுதலாகக் குடியேற நிலம் காப்பாற்றப்படவேண்டும் என்ற கூற்றுக்கு எதிர்மாறாக, பீதியினால் பலர்தமது சொத்துக்களைவிற்று, குடாநாட்டிற்கு குடிபெயர்கின்றார்கள். எல்லை எம் கண்முன்னலேயே பறிபோவதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நானும், எனது தொகுதி மக்களும் தள்ளப்பட்டுள்ளோம்.

தொகுதியின் முன்னேற்றம், குடியேற்றம், காணிப் பங்கீடு போன்ற முக்கிய அதிகாரங்களை கையேற்று தாம் நினைத்த திட்டங்களை அமுல் நடத்துவதற்கு தெற்கில் இருந்து மாவட்ட அமைச்சர் வந்துள்ளார். இந்த அமைச்சர் கூட்டுகின்ற கூட்டங்களிலோ, கலந்துரையாடல்களிலோ நாம் பங்கு பற்றுவது தவறு என

[6ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் விஜயம்

[உடுப்பிட்டி]

சமூகசேவைகள் அமைச்சர் திரு அசோக கருணரத்தின அடுத்த மாதம் 2-ம் திகதி கரவெட்டிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தையும், அநாதைப் பிள்ளைகள் விடுதியையும் பார்வையிடும் முகமாகவே சமூக சேவைகள் அமைச்சர் கரவெட்டிக்கு விஜயம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## கருணாநிதி இல்லம் தாக்கப்பட்டது!

[சென்னை]

தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதியின் இல்லம் நேற்று கடுமையான தாக்குதலுக்குள்ளானது!

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஐநூற்றுக்கும் அதிகமானவர்கள், திரு. மு. கருணாநிதியின் இல்லத்தை கற்களாலும், போத்தல்களினாலும் தாக்கிச் சேதப்படுத்தியதாக இந்தியப் பிரதமரிடமும் இந்திய ராஷ்டிரபதியிடம் நேற்றுப் புகார் செய்யப்பட்டது.

திரு. கருணாநிதியின் இல்லம் தாக்கப்பட்டது சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. எம். கல்யாணசுந்தரம் மற்றும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய முஸ்லிம் லீக், தமிழக காங்கிரஸ், போர் வேட்புளக், இந்திய குடியரசு கட்சி, காந்தி காமராஜர் கட்சி உட்பட பல கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரு மகஜரில் கையொப்பமிட்டு, இந்தியப் பிரதமருக்கும் இந்திய ராஷ்டிரபதிக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

**3500 பேர் கைது!**

நேற்றைய ஹர்த்தால் காரணமாக தமிழகத்தில் 3500 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். சென்னையில் மட்டும் 900 பேர் கைது செய்யம்பட்டனர்.

[மேலும் விபரங்கள் 4ம், 6ம் பக்கம் பார்க்க]

## கடத்தல் வேட்டையில் கைக்கடிகாரங்கள் சிக்கின!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்குக் கடத்திக் கொண்டு வரப்பட்டதெனச் சந்தேகிக்கப்படும் 3000 ரூபா பெறுமதியான 'மொண்டியா' கைக்கடிகாரங்களை யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்தில் நேற்று சுங்கத்தடுப்பதிகாரி திரு. த. பவளராசா தலைமையில் சென்ற சுங்க அதிகாரிகள் நடத்திய திடீர் வேட்டையில் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பாக சந்தேகத்தின் பேரில் மேற்படி வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த ஒருவரையும் சுங்க அதிகாரி விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளார். (ஞ)

கொழும்பு நகரில்

## மாதந்தோறும் பத்து லட்சம் பெறுமதியான திருட்டுகள்!

—டி.ஐ.ஜி. 'சுந்தர்'

[கொழும்பு]

"இந்த வருடம் நாட்டில் 966 கொலைகள் நடந்துள்ளன. 50சதவீதமான கொலைகள் கத்திக்குத்து காயங்களினாலேயே ஏற்பட்டவை. 834 ஆண்களும், 125 பெண்களும் இக்கொலைகளைச் செய்துள்ளார்கள்.

தகவல் திணைக்களத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், போதைவஸ்து தடுப்பு, குற்றத்தடுப்பு பிரதி பொலிஸ்மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் பயிற்சி நிலைய உதவி பொலிஸ்மா அதிபர் திரு. முனிதாசாவும் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்.

பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது: இக்கொலைகளில் 57 கொலைகள் திருட்டுகள் நடைபெற்றபோது ஏற்பட்டதாகும்.

கொழும்புநகரில் ஒரு லட்சம் மக்கள் வாழ்கின்றனர். சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் தினமும் கொழும்பிற்கு வந்துசெல்கின்றார்கள். கொழும்புநகரில் மாதந்தோறும் 10லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுக்கள் நடைபெறுகின்றன.

அடுத்த மாதம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் சர்வதேச போதைவஸ்து தடுப்பு மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது இம்மாநாட்டில் 20 நாடுகள் கலந்துகொள்ளவிருக்கின்றன கனடா பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், மேற்குஜெர்மனி பார்வையாளர் நாடுகளாக கலந்துகொள்ளும். [ம]

## 200 தமிழ்க் குடும்பங்களுக்கு வெளியேற்ற உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிக்கும் முறிகண்டிக்குமிடையில் பிரதான வீதியோரத்தில் வசிக்கும் சுமார் 200 தமிழ் குடும்பங்களை வெளியேறுமாறு மேலிடத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவர்கள் யாவரும் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியை நேரில் சந்தித்து தங்கள் நிலைமையை விளக்கிக் கூறினர்.

பொலிஸார் வந்து தங்களை வெளியேறுமாறும், அது மேலிடத்து உத்தரவு என்று கூறியதாகவும், அவர்கள் கிளிநொச்சி எம். பி.யிடம் தெரிவித்தனர்.

இவர்கள் கூட்டாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். (க)

# பனம் பொருள் அபிவிருத்தியில் அபிவிருத்திச்சபை

## மரம் சீவுதற்கும் பயிற்சி அளிக்கப்படும்

(கொழும்பு)

பனை அபிவிருத்திச்சபை, பேராசிரியமியன்ற பயிற்சி முறையொன்றை ஆரம்பிக்கவுள்ளது. அது முதலில் பனை ஓலைக் கைப்பணிப் பொருட்களைத்தயாரிப்பதில் ஆட்களைப் பயிற்றும். இப்பயிற்சி ஒரு மாத கால அளவினது. உள்ளூர்ச்சந்தைத் தேவை, வெளிநாட்டிலுள்ள நுண்ணியவுணர்வுடைப் பொருள்கொள்வோர் ஆகிய இரண்டிற்கும் ஏற்ப கைப்பணிப் பொருட்களைச் செய்யவல்லராய் அவர்கள் பயிற்றப்படுவர், தரத்திற்கும் பயன்பாட்டுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் பயிற்சிக்காலத்தின்போது பயிற்சிபெறுவோர்களுக்குக் கைச்செலவுப்படி ஒன்று வழங்கப்படும். இவ்வாறு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. வி. நித்தியானந்தா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

பயிற்சி பெறுபவர்களின் செயல்முனைப்பும் வடிவமைப்புத் திறனும் காட்டுவோர் கைப்பணிப் போதனாசிரியர்களாகப் பணியாற்றத் தெரிவு செய்யப்படுவர். பயிற்றப்பட்ட போதனாசிரியர்கள் நியமிக்கப்படுவதனையடுத்து பயிற்சி நெறிகள் கிராமமட்டத்தில் நடத்தப்படும் பயிற்சி பெறுபவர்களில் சிறப்புத் திறனுடைய சிலர் தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுவர்,

இச்சபை, அதற்குத் தேவைப்படும் கைப்பணிப்பொருள் வகைகளை நியாய விலைக்குப் பயிற்சிபெறுபவர்களிடமிருந்து கொள்வனவு செய்யும்.

மரபுவழிக் கைப்பணியாளர்களைப் போதனாசிரியர்களாகச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் பனம் கைப்பணிப் பொருள்களை வழங்குவோராக அவர்களைப் பதிவுசெய்வதற்குமாக இச்சபை அவர்களுடன் தொடர்புகொண்டுள்ளது.

சபை, தரகர்களுடனும் வியாபார நோக்குடையவர்களுடனும் எவ்வித கொடுக்கல் வாங்கலும் வைத்திருக்கமாட்டாது. பனம் கைப்பணிப் பொருட்கள் உற்பத்திசெய்யப்படும் முக்கியமான கிராமங்களில் கொள்வனவு நிலையங்களும் நிறுவப்படும், இதன் பொருட்டு பருத்தித்துறையிலுள்ள திக்கம் என்னுமிடத்தில் அமைந்துள்ள இடமொன்று பரீட்சிக்கப்பட்டுள்ளது,

### பனந்தோப்புகள் உண்டாக்கப்படும்

பனை மீளநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டுத் தேவையான தாழ்ப்பதற்கேற்ற பனம் கொட்டைகளை வழங்குவதற்கும் ஒழுங்குகளை செய்யப்பட்டுள்ளன. பனந்தோப்புகளை ஆரம்பிப்பதற்குகந்தபல இடங்கள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. பனந்தோப்புக்களை ஆரம்பிப்பதற்காக, ஒவ்வொன்றும் குறைந்தது 50 ஏக்கர்களைக் கொண்ட காணித்துண்டுகளை ஒதுக்குமாறு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவும் அம்பாந்தோட்டை, புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் வேண்டப்பட்டுள்ளனர். தாழ்ப்பதற்காக இரண்டு லட்சம் பனங்கொட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் பொருட்டு மேலும் 10 லட்சம் பனங்கொட்டைகளை இவ்வாண்டு விநியோகிக்கமுடியுமென இச்சபை நம்பிக்கைகொண்டுள்ளது.

### கருப்பநீரிலிருந்து குளிர்பானம்

பனம்கருப்பநீரிலிருந்து தயாரிக்கப்படும் குளிர்பானமொன்றைச் சந்தையில் விற்பனை செய்ய இச்சபை எண்ணியுள்ளது. இது மிகவும் புத்துணர்ச்சியூட்டும் பானமாகும். கருப்பநீர்ப்பானம், போத்தலிலடைத்த கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விற்பனையும் 1979ம் ஆண்டின் முற்பகுதியில் மரஞ் சீவும் போகத்தின் வருகையை அடுத்தே ஆரம்பமாகும். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (தரு உற்பத்திகள்) பனம், தெங்குப் பொருட்கள் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஆகியோரிடையே இடம்பெற்றகலந்துரையாடல்களின் விளைவாக, இச்சபைகளின் வருங்காலம் பற்றி அறிக்கை தயாரிப்பதற்கு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் தற்போதுள்ளவாறு தொழிற்படுமா அல்லது பனைச்சபையால் நிருவகிக்கப்படவேண்டுமா என்பது பற்றி இக்குழுக்கள் ஆராயும்.

### மரம் சீவுவோர்க்குப் பயிற்சி

மரம் சீவுவோர் பயிற்சி நிலையத்தை நிறுவும்பொருட்டுப் பல்வேறு இடங்கள் பரீட்சிக்கப்பட்டுள்ளன! மரம் சீவுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்துவருகின்றது. அவர்களில் அநேகர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். இளந்தலைமுறையினர் இத் தொழிலில் ஈடுபட விருப்பம்காட்டுவதாகத் தோன்றவில்லை. பனை மரங்களை முழுக்க முழுக்கப் பயன்படுத்தவேண்டுமாயின், கூடியளவு மரஞ்சீவுபவர்கள் தேவைப்படுவர். இப் பயிற்சிநெறி இரண்டு மாதங்கள் நடைபெறும். ஒவ்வொரு பயிற்சிநெறியிலும் ஒரேசமயத்தில் 100 பேர் பயிற்றப்படுவர்.

இச்சபை, இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகம், யாழ்ப்பாண வளாகம் ஆகியவற்றுடன் இணைந்து பனம் பண்டங்களை வர்த்தகரீதியில் அதிகம் பயன்படுத்துவது சம்பந்தமாகப் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது.

பனம் பண்டப் பொருட்காட்சியொன்றும் அண்மையில் நடத்தப்படவுள்ளது. (அ)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மாங்குளம், துணுக்காய், வவுனிக்குளம் ஆகிய பகுதிகளில் 24-10.78 செவ்வாய் பனம்விதை விநியோகிக்கப்படும். விதை நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்கள் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற், த. பெ. 77. யாழ்ப்பாணம் 0627

### தேவை

ஆங்கிலத்தில் தட்டெழுத்து சுருக்கெழுத்துத் தெரிந்த கணக்காளர் உடனடியாகத் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன், 48, 50, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். 0636

சிறுவர் கழகத்திற்கு குடிபதியாயிருந்து வகுப்புகள் நடத்துவதற்கு தகுதி ஆர்வமுடைய ஆசிரியர் தேவை. உடன்விண்ணப்பிக்கவும். தபால்அதிபர் மேற்பார்த்து. மீசாலை. 0645

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Emma & Mc Beth) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0592, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 0592


## யாழ்ப்பாணத்தில் கடல் கடந்த செய்திச் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர்களின் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துவிளக்குவதற்கு 'கடல் கடந்த தமிழர் செய்தி நிறுவனம்' ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இந்நிறுவனமே வெளிநாடுகளின் பத்திரிகை நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வமான செய்திகளை வழங்குமாம். இதன் அமைப்பு முறைகள் பற்றிக் கூட்டணியின் சிரேஷ்ட எம். பி.க்கள் சிலர் கூடி ஆராய்ந்துள்ளதாகத்தெரிகிறது. [கெ-அ]

## பட்டியோடையில் குடியேற்றத்திட்டம்

(உடுப்பிட்டி)

அல்வாய் தெற்கு பட்டியோடை குடியேற்றத் திட்டத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளில் பருத்தித்துறை எம். பி, திரு. கே. துரைரத்தினம் ஈடுபட்டுள்ளார். [இ]


## கேள்வி விளம்பரம்

1. 1979ம் ஆண்டிற்குக் கீழ்க்காணும் குத்தகைகளுக்குக் கேள்விகள 16-11-78ந் திகதி பி. ப. 3-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
   1. மாட்டிறைச்சிக் கடை இல. 1,2.
   2. ஆட்டிறைச்சிக் கடை இல. 1.
   3. தம்பாலை/வளலாய் மரக்கறிச் சந்தை.
   4. அச்சுவேலிப் பொதுச் சந்தை. முறையே கேள்விப் பிணைகள் ரூ. 100/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம் 15-11-78ந் திகதியன்று பி. ப. 3-00 மணிவரை இவ்வலுவலகத்தில் செலுத்தப்படுமிடத்து கேள்விப்பத்திரம் விநியோகிக்கப்படும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.
2. 1978ம் ஆண்டிற்குரிய ஒப்பந்தகாரர்/ வழங்குநர்களாகப் பதிவுசெய்யவிரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை விண்ணப்பிக்கும் விடயங்களைத் தெளிவாகக்குறிப்பிட்டு 16-11-78ந் திகதிக்குள் அனுப்பிவைக்கும்படி அறிவிக்கப்படுகின்றது.
3. சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தைக்குள்ளிருக்கும் 1/15, 1/16, 1/17, 1/17ஏ ஆகிய இலக்கக்கடைகளை குத்தகைக்குப் பெறவிரும்புவோர் 16-11-78ந் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும். பத்திரங்களின் கட்டணம் 1ம் பந்தியில் குறிப்பிட்டவாறு செலுத்திப் பெறல்வேண்டும்.
4. அச்சுவேலி வீட்டுத் திட்டத்திலுள்ள 102 வீடுகளையும் வீடற்றவர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் வீடற்றவர்களிடமிருந்து 16-11-1978ந் திகதிக்குப்பிந்தாமல் இவ்வலுவலகத்தில் அனுப்பிவைக்கவும்.

ஒப்பம்:

நீ. ப. ஜெகநாதன்
நிர்வாக உத்தியோகத்தர்,
கிராமசபை அச்சுவேலி.

கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி,
18-10-1978. 0628


## கௌரவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத் திருவிழாவை முன்னிட்டு தினமும் "கம்பராமாயண விரிவுரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவுக்கு தேவஸ்தானத்தின் சார்பில் அதன் முகாமையாளர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பிரதம குருவாகிய சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் ஆசியுரை கூறினார். [இ]


## நீதிமன்ற விற்பனை விளம்பரம்

வழ. இல. ஈடு. 605

சின்னத்துரை குலேந்திரசிங்கம்,
பண்டத்தரிப்பு.

வழக்காளி

எதிராக

1. சண்முகநாதன் கைம்பெண் மனோன்மணி
2. சின்னத்தம்பி சோமசுந்தரமும் பெண்
3. சிவகாமிப்பிள்ளையும்

அராலி மேற்கு.

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு 605 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்ற கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். (1978-11-10)

### தீர்வைத்தொகை

முதலும் வட்டியும் ரூபா 3800/-ம் மேலும் ரூபா 3000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு5 வீத வட்டியும் வழக்குச் செலவுரூபா 556-05(இதில் நடைபெற்ற செலவு ரூபா 353-10 நடைபெறவேண்டிய செலவு ரூபா 115-60 மேலதிக சமயர் சமயச்செலவு ரூபா 87-35) கொடுக்கவேண்டியிருப்பதாலும் செலவுப்பணத்தில் ரூபா 200/-, தீர்வைத்தொகையில் ரூபா 1000/- பின் 10-3-78. ரூபா 1700/- கட்டப்பட்டுள்ளது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி மேற்கு இறை எருக்கலப்பிட்டியும் குருக்கன் வளவும் நில. பர. ஆறு. குழி எட்டரையும் (பர. 6 குழி 8½) வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வற்றப்புலம் விசுவநாத சுவாமி கோவிலுக்கும் செல்லையா பெண் நாகம்மாவுக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம், மேற்கு சண்முகநாதன் கைம்பெண் மனோன்மணிக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கையும் வற்றப்புலம் விசுவநாத சுவாமி கோவிலுக்குரிய ஆதனமும் இதடங்கலும் E 333/97 பதிவு.

சோ. சிற்றம்பலம்,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

59, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்,
10-10-1978. 0643

### நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 28-10-1978 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான விடயம்: புதிய நிருவாகசபைத் தெரிவு

க.ச. முத்துவேற்பிள்ளை,
கௌரவ செயலாளர்.

23-10-78. 0641

### யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## மலிவு விற்பனை

எமது சங்கத்தில் இருக்கும் துணிவகைகள் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனை மூலம் ரவுண் சொப் கிளை. பிரதான சில்லறை விற்பனை நிலையம் ஆகியவற்றில் வைத்து விற்பனை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

சேட் வகைகள்
சூட்டிங்
பிளவுஸ் வகைகள்
சித்தை வகைகள்

பதில் பொது முகாமையாளர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
23-10-1978 0646

The Eelanaadu

## சிங்கள மொழித் தேர்ச்சி:

# பாதிக்கப்பட்ட நடத்துநர் ஜனாதிபதியைச் சந்திப்பர்

[யாழ்ப்பாணம்]

சிங்கள மொழித்தேர்ச்சி யின்மையால் பாதிக்கப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை நடத்துநர்கள், ஜனாதிபதியை சந்தித்து தங்கள் நிலைமையை எடுத்துக் கூறவிருக்கிறார்கள்.

திருகோணமலை டிப்போவைச் சேர்ந்த திரு மு. வேலுப்பிள்ளை நடத்துநனர்களின் பிரச்னை குறித்து ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

இது தொடர்பாக சகல இ. போ. ச. டிப்போக்களிலுள்ள சிங்கள மொழித்தேர்ச்சி யின்மையால் பாதிக்கப்பட்ட நடத்துநர்களின் விபரங்களை திரு. வேலுப்பிள்ளை கோரியுள்ளார்.

மன்னார், வவனியா, கல்முனை, அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பருத்தித்துறை, காரைநகர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, புத்தளம் உட்பட 15 இ. போ. ச. டிப்போக்களில் சிங்கள மொழி தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம், இ. போ. ச டிப்போவை சேர்ந்த காப்பாளர்கள் பெயர் பட்டியல் ஒன்றை தயாரித்துவருகிறார்கள். [க-இ]

## சிவல் தொழிலில் பயிற்சி

பனைஓலைக் கைப்பணிப் பொருள்களைத் தயாரிப்பதிலும் சிவல்தொழிலிலும் பயிர்சி அளிக்கும் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதற்குப் பனை அபிவிருத்திச்சபை முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

பனம்பொருள் உற்பத்தியில் நாட்டம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்ய முடியுமென்பதையும் பலதடவைகளில் இதே பத்தியில் நாம் எடுத்துக்காட்டி வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

பனை அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டதும் அதை வரவேற்று எழுதியபோதும் அதன்பின்னரும் நாம் சில ஆலோசனைகளையும் தெரிவித்திருந்தோம். இந்த ஆலோசனைகளும் பனை அபிவிருத்திச்சபை செயல்படுத்தவிருக்கும் திட்டத்தில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

பனை ஓலைக் கைப்பணிப் பொருள்களைத் தயாரிப்பதில் பயிற்சியளிக்கும் திட்டத்தில் மரபுவழிக் கைப்பணியாளர்களைப் போதனாசிரியர்களாகச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் பனம் கைப்பணிப் பொருள்களை வழங்குவோராக அவர்களைப் பதிவுசெய்வதற்குமாக பனை அபிவிருத்திச் சபை அவர்களுடன் தொடர்புகொள்ள முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

சிவல் தொழிலாளர் இல்லாமல் பனம்பொருள் அபிவிருத்திக்கு என்னதான் திட்டமிட்டாலும் பயன் கிடைக்கமாட்டாது. இதனால்தான் சிவல்தொழிலில் பயிற்சியளிப்பதற்கும் பனை அபிவிருத்திச்சபை முன்வந்திருக்கிறது. ஆனாலும் இது எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பது திட்டவட்டமாகச் சொல்லிவிடக்கூடியதல்ல.

சிவல் தொழில் மிக ஆபத்தானது. நிமிர்ந்து நீண்டு வானை நோக்கி உயர்ந்துள்ள பனையில் ஏறி இறங்குவதென்பது சுலபமல்ல. இந்த சிவல் தொழிலில் ஈடுபட்டுவந்த பரம்பரை அருகிவருகிறது. இப்போது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களே. புதிய இளம் தலைமுறையினர் இத்தொழிலில் ஈடுபடமுன்வருவதில்லை.

இத்தொழிலில் கிடைக்கும் ஊதியக்குறைவும் இத்தொழிலுள்ள ஆபத்தும்தான் இத் தொழிலில் இளம் தலைமுறையினர் ஈடுபட முன்வராததற்குக் காரணம் என்று சொல்ல முடியாது.

செய்யும் தொழிலைக் கொண்டு சாதியை வகுத்து சமுதாயத்தில் பாகுபாடு காட்டும் பழக்கம், சமுதாயத்தில் புரையோடியிருப்பதும் இதன் விளைவாக சமுதாயத்தில் சிலருக்குஇழைக்கப்படும் அநீதிகளும் சிவல் தொழிலிலும் மற்றும் சில தொழில்களிலும் இளம்தலைமுறையினர் ஈடுபடுவதற்குத் தடையாக இருந்துவருகிறது. இத்தடையை நீக்குவதென்பது சுலபமல்ல தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

பனையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி அதன் பயனைப் பெறுவதற்கு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சமீபத்தில் தமிழ்நாட்டிலிருந்து வந்த ஒருசெய்தி கூறியது. பனையில் ஏறி இறங்குவதற்குச் சுலபமான நவினசாதனம் கண்டுபிடிப்பதற்கும் ஆராய்ச்சி நடைபெறுகிறது.

'ஈழநாடு' வாரமலரில் பனம்பொருள் பற்றிக் கட்டுரைத் தொடர் எழுதிவரும் விவசாயப்பட்டதாரியான திரு. துருவசங்கரி சென்றவாரம் எழுதிய கட்டுரையில் பனையில் சுலபமாக ஏறி இறங்குவதற்கான நவீனசாதன அமைப்புப்பற்றி விளக்கியிருந்தார்.

இந்தயோசனையையும் பனை அபிவிருத்திச்சபை கவனத்தில் கொள்வதுடன் தமிழ் நாட்டு அரசுடனும் தொடர்பு கொண்டு பனையில் ஏறி இறங்குவதற்கான சுலபமான சிக்கனமான நவீன சாதனங்களைத்தயாரிப்பதற்கு எடுக்கும் முயற்சியானது செய்யும்தொழிலால் உருவாக்கப்படும்சாதிப்பிரச்னையையும் சமுதாயத்திலிருந்து களைந்தெறிவதற்கு வழிவகுக்கும்.

## இன்றைய திருவிழா

]யாழ்ப்பாணம்[

கோண்டாவில் இ போ. ச. டிப்போ ஞானவைரவர் கோவில் மண்டலாபிஷேக 41 வது திருவிழா இன்று நடைபெறுகிறது. 769 வது பாதை பஸ் குழுவினர் இத் திருவிழாவை நடத்துகின்றனர்.

இன்றிரவு இராமநாதன் கலைக்கல்லூரி மாணவர்களின் பண்ணிசைவிருந்து பொன் சுந்தரலிங்கத்தின் இசை விருந்து மற்றும் பிரபல தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். விழாமுடிவில் விசேஷ பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. [அ

## இம்முறை அதிகசித்தி

[பலாலி]

அண்மையில் வெளியான க பொ. த [உயர் தர]ப் பரீட்சை பெறுபேறுகளில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி சென்ற ஆண்டிலும் அதிக சித்தியைப்பெற்றுள்ளது.

இக்கல்லூரியிலிருந்து இவ்வருடம் இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 80 வீதமான மாணவர்கள் சித்தியடைத்துள்ளனர்.

இவர்களில் 61 பேர் விஞ்ஞானத்துறை மாணவர்கள்.

சென்றவருடம் இக்கல்லூரியிலிருந்து 42 மாணவர்கள் பல்கலைக்கழக விஞ்ஞான பீடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையிலிருந்து இப்பரீட்சைக் குத்தோற்றிய செல்வி ஞானவதி சேவற்கொடியோன் என்பவரும் நான்கு பாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றுள்ளார். ]அ]

### மணிவாக்கு

பேராசையையும், பொறுமையையும், பணத்தை அபரிமிதமாகச் சேர்த்தலையும் விட்டு ஒழி.

—சுவாமி சிவானந்த சரஸ்வதி.

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 7-ந் திகதி

செவ்வாய்க்கிழமை

(24-10-78)

**மேஷம்:** கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். தெய்வத்தின் துணையும் உண்டு.

**இடபம்:** புதுமையான செய்தியொன்றும் கிடைக்கக் கூடும். சிலர்அரசியலில் குதிப்பதற்கும் ஆலோசிக்கக்கூடும். பொது மக்களின் ஆதரவிற்கும் பொருள்விருத்திக்கும் இடமுண்டு.

**மிதுனம்:** எதிலும் தடுமாற்ற நிலை ஏற்படும் குசுகுசுப் பேச்சுக்கள் மூலம் அவதூறுகள் பரப்பப்படலாம். வியாபாரத்துறையில் மந்தநிலை தென்படும். உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**கடகம்:** ஆசையலைகள் மோதும். வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும். ஆணவப்போக்கினால் பிறருடைய பகையைச் சம்பாதித்துக்கொள்ளுவீர்கள். மன அடக்கம் நன்று.

**சிங்கம்:** குடும்பநலனில் உற்சாகம் பிறக்கும். உறவு முறைகளில் அபிவிருத்தி காணப்படும். அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். வக்கரப்பேச்சு வெற்றியைத் தேடித்தரும்.

**கன்னி:** வாழ்க்கையில் ஏற்படும். திடீர் திருப்பம் திரவியலாபத்தைக் கொண்டு வரலாம். வணிகர்கள் புதிய துறைகளில் முதலீடுசெய்ய விரும்புவார்கள். நண்பர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**துலாம்:** பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். முன்னெச்சரிக்கை நன்று.

**விருச்சிகம்:** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் பிறக்கக் கூடும். இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும் உறவினர் வருகை உங்களுக்கு உவகையைத் தரும். பரவசமூட்டும் நாள்.

**தனுசு:** எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்தவும். உதவிசெய்யப்போய் குறை கேட்க நேரிடும் உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**மகரம்:** குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும். தொழில் துறையிலும் புதிய வாய்ப்புக் கிடடுண்டு மகிழ்ச்சிதரும் சம்பவங்களும் இடம்பெறும்.

**கும்பம்:** செய்கருமங்களில் சிரமம் தோன்றக்கூடும். உடல் நலமும் சிறிதுபாதிக்கப்படலாம் நண்பர் ஒருவர் காலை வாரி விடுவதற்கு முனையக்கூடும் நிதானம் நன்று.

**மீனம்:** மகிழ்ச்சிகரமான செய்திக்கிடமுண்டு புண்ணிய காரியங்களை மனம் நாடும். நீண்ட நாள் மனக்குறைஇன்று நிவர்த்தியாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## தமிழினத்தின் பிரச்னைகள்:

# தமிழ்க்காங்கிரஸ் குழு ஜனாதிபதியைச் சந்திக்கும்

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளையிட்டு, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை தமிழ்க் காங்கிரஸ் குழு நேரில் சந்தித்து அவற்றுக்கு நிவாரணம் தேடும் வழிவகைகளைக் கையாளவிருக்கிறது.

சாவகச்சேரியில் சரஸ்வதி பூங்காவில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் சாவகச்சேரி கிளைக் கூட்டத்தில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி தமிழ்க் காங்கிரஸ் கிளைத் தலைவர் ஆசிரியமணி ஆர். ரி சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. ரி. சங்கரப்பிள்ளை மேலும் கூறியதாவது:- அடுத்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ் வருடாந்த மாநாட்டிற்குப் பின்னர், தமிழ்க்காங்கிரஸ் குழு ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கிறது. அச்சமயம் தமிழினத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகள்பற்றி விரிவாக எடுத்துக்கூறி அவற்றுக்கு நிவாரணம் தேட சகல முயற்சிகளையும் எடுப்போம்.

"தமிழ்க்காங்கிரஸ் வாலிபர்களுக்கு, வேலைவங்கிப் படிவங்கள் வழங்கப்படவில்லையென்றும், சகல விஷயங்களிலும் தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் இங்கு கூறப்பட்டது இதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு, காங்கிரஸ் அபேட்சகர்கள் ஜனநாயக முறைப்படியே தெரிவு செய்யப்படுவார்கள். உள்ளூராட்சிமன்ற காங்கிரஸ் நியமனக் குழுவில, அபேட்சகர்கள் எவரும் இடம் பெறமாட்டார்கள்.

திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், ஏ. ரி. மூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (க-அ)

## சாவகச்சேரி நகரசபைத் தேர்தல்:

# காங்கிரஸ் கிளைகளின் ஆலோசனை பெறப்படும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபைத் தேர்தல் தொடர்பாகத் தமிழ்க்காங்கிரஸ் கிளைகளின் ஆலோசனைகளைப்பெற 7 பேர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைத் தேர்தல்பற்றிய ஆலோசனைக் கூட்டம், சாவகச்சேரி தமிழ்க் காங்கிரஸ் கிளைத் தலைவர் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்க்காங்கிரஸ் நியமனக் குழுவைச் சேர்ந்த திருவாளர்கள் ரி. சங்கரப்பிள்ளை, ஜி. ஜி பொன்னம்பலம், எஸ். ஆர். கனகநாயகம், ஏ. ரி. மூர்த்தி ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

இக்கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு வெளியில் வசிக்கும் 7 பேர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவினர் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள 11 வட்டாரங்களிலும், காங்கிரஸ் கிளைகளைக் கூட்டி அவைகளின் ஆலோசனைகளைப் பெற்று இரு வாரத்திற்குள் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

## முல்லைத்தீவில் மழை

[முல்லைத்திவு]

முல்லைத்தீவில் நீண்டநாட்களுக்குப் பின் மழை பெய்துள்ளது. இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் [உ]

## நாச்சிக்குடா கி. அ. சங்கம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி நாச்சிக்குடா கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை அங்கத்தினர் தெரிவு போட்டியின்றி ஏகமனதாக நடைபெற்றது. சங்கத் தலைவராக ஆசிரியர் ஜனப் க. மஹ்முதீன் தெரிவு செய்யப்பட்டார். போஷகர்- பூநகரி உதவி அரசாங்க அதிபர் காரியாலய உத்தியோகத்தர் திரு. எஸ். இராசரத்தினம்.

கூட்டத்தில் நாச்சிக்குடா மூகியித்தீன் பள்ளி கதீப் ஜனாப் சக்கத்துல்லா, நாகபடுவான் வித்தியாலய அதிபர் ஜனாப் பாரூக் ஆகியோர் கிராமத்தவர்களுக்கிடையில் ஏற்படவேண்டிய ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் வற்புறுத்தி உரையாற்றினார்கள். (ஊ)

## தமிழ்நாடு மறியல் போராட்டம்:

# 3 எம். எல். ஏக்கள் உட்பட 3000 தொழிலாளர்கள் கைது!

சென்னை, அக். 23

தமிழ்நாட்டில் இன்று திங்கட்கிழமை நடைபெறஇருந்த எதிர்க்கட்சிகளின் மறியல் போராட்டம் தொடர்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 3 ஆயிரத்துக்கும் அதிகமான எதிர்க்கட்சியினரும் தொழிலாளர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

மூன்று எதிர்க்கட்சி சட்டசபை உறுப்பினர்களும் பல தொழிற்சங்கத் தலைவர்களும் கைதானவர்களுள் அடங்குவர்.

இதேவேளையில் உத்தேச வேலைநிறுத்தம், ஹர்த்தால் மறியல் போராட்டத்தை ஒட்டி பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுமக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலேயே திரு. இராமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

### அக்டோபர் புரட்சி: 891 கைதிகளுக்கு மன்னிப்பு

மொகடிசு, அக். 23

அக்டோபர் புரட்சியின் 9வது ஆண்டு நிறைவை ஒட்டி சோமாலியா 891 கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளது. (இ)

### அமெரிக்க-ரஷ்ய ஆயுதக்கட்டுப்பாடு: விரைவில் ஒப்பந்தம்?

மாஸ்கோ, அக். 23

ரஷ்யா - அமெரிக்க புதிய ஆயுதக்கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்று விரைவில் செய்துகொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் இப்போது தோன்றியுள்ளதாக சோவியத்யூனியனில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு. சைரஸ் வான்ஸுக்கும் ரஷ்ய வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவுக்குமிடையில் மாஸ்கோவில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டதை அடுத்தே சோவியத் யூனியனில் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பேச்சுக்களில் முன்னேற்றத்திற்கான நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளதாக அமெரிக்க அரசியல் வட்டாரங்களிலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### இந்தியாவில் ஒரே நேரத்தில் சமூக பொருளாதார புரட்சி ஏற்படவேண்டும்

### பாதுகாப்பு அமைச்சர் விருப்பம்

புதுடில்லி, அக். 23

''இந்தியாவில் ஒரேநேரத்தில் சமூக பொருளாதாரப் புரட்சியை மேற்கொள்ளவேண்டும். இவ்வாறான புரட்சி ஒன்று மேற்கொள்ளப்படுமானால் அதுவே உலகின் மிகப் பெரும் புரட்சியாக இருக்கும்''

இவ்வாறு இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

ஹரிஜனர்களாக இருந்தாலும் சரி, பிராமணர்கள், உயர்ஜாதியினராக இருந்தாலும் சரி சகலரும் ஒன்றிணைந்து சுரண்டலுக்கு எதிராகப் போராடவேண்டும் என்றும் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார். (இ)

### நூற்றுக்கதிகமான பெண்கள் படுகொலை!

லண்டன், அக். 23

ஸாம்பிய தேசிய வாதிகள் முகாம்களின் மீது சட்ட விரோத ரொடீஷிய வெள்ளையர் அரசு நடத்திய தாக்குதலில் நூற்றுக்கதிகமான பெண்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஆபிரிக்க தேசியவாதத் தலைவர் திரு. என்குமா தெரிவித்தார். [இ]

### 'பனம்பொருள் அபிவிருத்திமூலம் வேலைவாய்ப்புப் பெறலாம்''

(தெல்லிப்பழை)

''பனம் பொருள்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் அதிக வருவாயை ஈட்டிக்கொள்ளலாம்.

பனம் தொழிற் துறையை அபிவிருத்தி செய்வதன்மூலம் அநேகருக்கு வேலைவாய்ப்பளிக்கலாம். பனம் கைப்பணிப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் பெருமதிப்பு இருக்கிறது.''

கட்டுவன் புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் பெற்றோர், ஆசிரியர், மாணவர்களால் நடாத்தப்பட்ட விழாவொன்றில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட தொழிலதிபர் திரு. க. கனகராசா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு வ. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கனிஷ்ட அதிபர் திரு சி சிவநாதபிள்ளையின் முயற்சியாலும் கல்லூரி மாணவர்களாலும் சேகரிக்கப்பட்ட பத்தாயிரம் பனம் விதைகள் திரு. கனகராசாவின் பனை உற்பத்திச் சேவை தொடர்பாக அன்னாருக்குஅன்பளிப்பபாக வழங்கப்பட்டது.

திரு. கனகராசா தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

#### சிறந்த உணவு

''பனம் பண்டங்களை நாம் பிரதான உணவாகக்கொண்டு வாழ்ந்தால் நோய் நொடியின்றிவாழலாம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள இந்த பனம் விதைகளை பனைமரம் இல்லாத குடியேற்றப் பிரதேசங்களுக்கு கொண்டுசென்று ஒரு குடும்பத்துக்கு 10 விதை மூலம் அன்பளிப்புச் செய்யப்படும். பல வருஷங்களுக்கு முன்பு நாம் கொடுத்துதவிய பனம் விதைகள் இன்று வடலிகளாக வளர்ந்து அப்பகுதி மக்களுக்கு பயனளிப்பதைக்கண்டு மகிழக் கூடியதாயிருக்கிறது.''

கனிஷ்ட அதிபர் திரு. சி. சிவநாதபிள்ளை பேசுகையில், திரு. க. கனகராசா மக்கள் சேவையையும், மகேஸ்வரன் சேவையையும் ஒருங்கிணைத்துச் செய்துவருகிறார் என்றும் இந்நாட்டில் பனை வளம் பெருக்க முயன்ற முதல் பெரியார் திரு. கனகராசா என்றும் கல்வித்துறைக்கும் அவர் சேவையாற்றிவருவதாகவும் அவர் கூறினார். திரு

[5-ம் பக்கம் பார்க்க]

### 14 வயதுச் சிறுமியுடன் குடும்பஸ்தர் கைது

(முல்லைத்தீவு)

திருமணமான பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவர் அயல் வீட்டில் வசித்துவந்த இளம் பெண்ணுடன் தலைமறைவாகிவிட்டார் என்ற புகாரைத் தொடர்ந்து பொலிசார் இருவரையும் கைதுசெய்தனர்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதவான் வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் இருவரும் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களான வவனியா தச்சன்குளத்தைச் சேர்ந்த நாராயணன் ரங்கநாதனும், அவரது ஆசைநாயகியான பொன்னையா மல்லிகாவும் கரைச்சிக் குடியிருப்பு என்ற இடத்தில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்திற்கு வந்திருந்த திருமதி ரங்கநாதன், தான் கணவனுடன் இனிமேல் சேர்ந்து வாழ விரும்பவில்லையென்றும், அவரது ஆசைநாயகியுடனே வாழவிடும்படியும், தனக்கும் பிள்ளைகளுக்கும் ஜீவனாம்சம் பெற்றுத்தரும்படியும் கூறினார்.

ஆசைநாயகியான மல்லிகாவுக்கு வயது குறைவாக இருப்பதால் அவர்பற்றிய விபரங்களை அறிவதற்காக இருவரையும் இம்மாதம் 31ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு நீதிபதிஉத்தரவிட்டார். (க)


# ஓர் உயர்தர முன்னேற்றம்...

# விவா

சத்துள்ள கோதுமை வடியுடன் முன்னேறிய புதுச் செய்முறையிலான பால் ஆகாரம். குடும்பம் முழுவதற்குமே உகந்தது.

பால் உணவுப்பதார்த்தத்தில் முன்னேறிய நவீன செய்முறைச் சிறப்பினைக் கொண்டது விவா. இன்றைய நவநாகரிக காலத்தில் ஏற்படும் களைப்பையும் இளைப்பையும் போக்கவல்ல ஊட்டச்சத்து முழுக்குடும்பத்திற்கும் அத்தியாவசியமாகிறது. அத்தகைய ஊட்டச்சத்தைக் கொண்டது விவா.

விநியோகஸ்தர்:

DARLEY BUTLER




விவா வில் உள்ள கூடுதலான மோல்ட் இதன் சிறப்பிற்குரிய காரணம்.

விவா வில் மட்டுமே 'மோல்ரோ'ஸை உருவாக்கும் 95% 'காபோகைரேற்ஸ்' அடங்கியுள்ளது. 'மோல்ரோஸ்' இலகுவில் சீரணிக்கும் தன்மை கொண்ட சத்துடையது என்பதனை விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன.

விவா வில் மட்டுமே வேறு எந்த பால் உணவிலும் இல்லாதவாறு அதிகம் 'மோல்ரோஸ்' அடங்கியுள்ளது.

விவா வில்வேறு எந்தவொரு தாவிலக் கலப்பும் இல்லாதது. இலகுவில் கரைந்து எளிதிற் சீரணமாகிறது.

விவா உத்தமமான ஆடைப்பால், பார்லி மோல்ட், கோதுமை மோல்ட் முதலியவற்றிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

விவா நேரடியாகவும், தேனீர் காப்பி முதலியவற்றுடனும் சேர்த்து அருந்தக்கூடிய சுவை உடையது.

விவா உருசையில் உயர்வு - கரைவதில் விரைவு!

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
சிவாஜி - மஞ்சுளா
எங்கள்
தங்கராஜா

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-ஜெய்சித்திரா
இன்ஸ்பெக்டர்மனைவி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Eagles Gather at Dawn
(War film)

## பனம்பொருள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மலை சண்முகராசா அடிகளும் பேசினர்.

இப்பாடசாலையின் 52 அடி ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீர் பெறமுடியாது கஷ்டப்படும் மாணவர்களுக்கு மின்னிணைப்புப் பொருத்தப்பட்ட மோட்டர் ஒன்று அன்பளிப்புச்செய்வதாகத் தொழிலதிபர் உறுதியளித்தார்.

பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு. ஏ. வி. மாணிக்கம் வரவேற்புரையும் காரியதரிசி திரு. வேலாயுதம் நன்றியுரையும் நிகழ்த்தினர். திரு. ரமேஷ் வைகுந்தவாசனின் பனைமர வளம் பற்றிய இசைநிகழ்ச்சியும் இடம்பெற்றது. (ஈ)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்) போன் 7898 தினசரி 4 காட்சிகள்
நினைவில் நின்றவள்

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
கலைஞர் மு. கருணாநிதியின் பூமாலை புதிய பிரதி
தீபாவளித் திரை விருந்து! "அவள்" புதிய பிரதி வண்ணப்படம் 25-10-78 முதல்

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Rader Men From The Moon
(Full Action Film)

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் கடைசி 3 தினங்கள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மென் கலர்)
27-10-78 முதல் எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி நடித்த
திருடாதே புதிய பிரதி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - தேவிகா நடித்த
வாழ்க்கைப்படகு
(புதிய பிரதி)

கடைசி 3 தினங்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)
27-10-78 முதல் சிவாஜி - சரோஜாதேவி நடித்த
சபாஷ்மீனா புதிய பிரதி

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி நடித்த
மர்மயோகி (புத்தம்புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

அவமானம்; காதல்தோல்வி:

# அண்ணனும் தங்கையும் நஞ்சிடம் தஞ்சம்

## பொலிகண்டியில் சோகசம்பவம்

(புலோலி)

அன்புத் தங்கையைக் காதலித்த, காதலனின் பெற்றோர்கள் கலியாணத்திற்குக் குறுக்கே நின்றார்களாம். இதனால் தங்கையின் மானம் கெடப் போகிறது என்று எண்ணிய அன்பு அண்ணன்; தானும் நஞ்சருந்தி: தங்கைக்கும் நஞ்சைக் கொடுத்து இருவரும் தற்கொலை செய்துகொண்ட சோக சம்பவம் ஒன்று பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிகண்டி என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

பரமசிவம் யோகேஸ்வரன் என்ற 30 வயது அண்ணனும், பரமசிவம் பத்மலோசினி என்ற 25 வயதுத் தங்கையுமே மேற்கண்டவாறு மரணத்தைத் தழுவிக்கொண்டவர்களாவர். இச்சம்பவங்கள் தொடர்பான மரணவிசாரணையை மரணவிசாரணை அதிகாரியும் சமாதான நீதிபதியுமான திரு. எம். வி. புவனேந்திரன் மேற்கொண்டார்.

இறந்தவர்களின் சகோதரியான பாலகுமாரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- "இறந்தவர்கள் எனது அண்ணனும், அக்காவுமாவர். இறந்த அண்ணா சம்பவதினம் மத்தியானம் வீட்டிற்கு வந்து என்னையும், அக்காவையும் கோவிலுக்குப்போக வெளிக்கிட்டு வரச் சொன்னார். அப்போது அவரது கார் எங்கள் வீட்டு வாசலுக்குச் சற்று அண்மையில் நிறுத்தப்பட்டிருந்தது. காருக்குள் எங்கள் மற்றச் சகோதரியான தனலட்சுமியும் இருந்தார். நாங்களும் வெளிக்கிட்டுக்கொண்டு வந்து காரில் ஏறினோம். காரில் ஏறியதும் கார் இக்கம்பகுதிக்குச் சென்று ஒரு கோவிலுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள பனங்காணிக்குள் போய் நின்றது. அப்போது இறந்த அண்ணா 'நாங்கள் மருந்து குடித்துச் சாவோம்; மற்றவர்கள் வீட்டில் வாழட்டும்' என்று சொல்லிக்கொண்டு கார் சீற்றின்கீழ் இருந்து ஏதோ ஒரு போத்தலை எடுத்து அதற்குள் இருந்ததைக் குடித்தார். பின் இறந்த சகோதரியையும் குடிக்கச் சொல்லி அவரிடம் கொடுத்தார்; அவர் குடித்ததும் அவரிடம் அப்போத்தலை வாங்கி எங்களிடம் குடிக்கச் செல்லி அண்ணா தந்தார். ஆனால் இறந்த அக்காவோ அதை எங்களிடமிருந்து பறித்துத் தூர வீசினார். நாங்கள் அழுது கொண்டு ஓடிச்சென்று மூத்த அக்காவிடம் கூறினோம். பின் அங்கிருந்து ஆட்கள் வந்து இருவரையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர், வரும் வைத்தியசாலையில் இறந்தனர்."

### இறந்தவரின் மாமன் சாட்சியம்

இறந்தவரின் மாமனை கந்தசாமி கணேசமூர்த்தி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்தவர்கள் எனது மருமகனும் மருமகளுமாவர். இறந்த எனது மருமகன் சகல விஷயங்களுக்கும் என்னுடன் ஆலோசனை செய்துதான் செயலாற்றுவார். சம்பவ தினத்திற்கு முதல் நாள் இறந்தவர் என்னிடம் வந்து தனது தங்கை பத்மலோசினிக்கும் தனது மனைவியின் சகோதரன் தர்மலிங்கத்திற்கும் காதல் தொடர்பு இருப்பது தனக்குத் தெரியவந்ததாகவும், எனவே இவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி தனது மனைவியின் பெற்றோருடன் இது பற்றி கதைத்ததாகவும் அவர்கள் ஒரேயடியாக இத்திருமண விடயத்தை மறுத்துவிட்டார்கள் என்றும் மிகுந்த மனக்கவலையுடன் சொன்னார். அத்துடன் இந்தத் திருமணம் மறுக்கப்பட்டது தனக்குப் பெரும் அவமானத்தையேற்படுத்தியுள்ளதாகவும் சொன்னார். ஆனால் தற்கொலை செய்வது பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை."

இறந்த யோகேஸ்வரனின் மனைவி, பிரேத பரிசோதனை செய்த மந்திகை அரசினர் வைத்தியசாலை பிரதம டாக்டர் திரு. எஸ். ஜி. ஞாதர் ஆகியோரின் சாட்சியங்களை அடுத்து இரண்டு மரணங்களும் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## வட்டுவாசல் நிர்வாகிகள்

[முல்லைத்தீவு]

வட்டுவாசல் சப்தகன்னியர் கோவில் சங்கப் பொதுக்கூட்டம் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் தலைவர் திரு. பொ. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக முன்பு இருந்த திரு. பொ. சின்னத்துரையே மீண்டும் தலைவரானார். உபதலைவராக திரு. ஆ. நாகராசாவும், காரியதரிசியாக இ. துரைசிங்கம், உபகாரியதரிசியாக இ. ஜெபவீரசிங்கம், தனதிகாரியாக சி. இராசையா, நிர்வாக சபைக்கு திரு. மு. கனகசுந்தரம், மு. சிவபாதம், சி. சோமசுந்தரம், ச. நவரெத்தினம் ஆகியோர் தெரிவாகினர். [உ]

## "ஏற்றுமதித் தரத்திற்கு உயர்த்தவேண்டும்"

[உடுப்பிட்டி]

"சீவல் தொழிலாளர்கள் வடபகுதியின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தெங்கு-பனம் பொருள் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதித் தரத்திற்கு உயர்த்த வேண்டும்.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உடுப்பிட்டி-கட்டைவேலி தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கக் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. ஆ. க. தம்பையா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் உடுப்பிட்டி எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"சீவல் தொழிலாளர்களுக்குச் சேமிப்பு, கடன் உதவி என்பனவற்றையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன்.

"பனங்கட்டி உற்பத்தியைப் பெரும் அளவில் அதிகரிக்க வேண்டியது அவசியம், ஆதலால் பதநீர் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும், கள்ளைச் சேகரித்துச் சாராயமாக்கிப் போத்தல்களில் அடைத்து விற்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் சீவல்த் தொழிலாளர்களுக்கு வருவாயைக் கூட்ட முடியும்." [அ]

## தொகுதிக்கு ஐந்துவீடு: பருத்தித்துறையில் பூர்த்தி

(புலோலி)

தேர்தல் தொகுதிகள் தோறும் ஐந்து வீடுகள் திட்டத்தின் கீழ் பருத்தித்துறைத் தொகுதியில் கற்கோவளத்தில் கட்டப்பட்ட ஐந்து வீடுகளின் கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள குறிப்பிட்ட அடிப்படைத் தகைமைகள் உடையவர்களுக்கு இவ் வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் மேற்கொண்டுள்ளார்.

பாதைகளை விசாலித்தல், அல்லது பாதைகளின் ஒதுக்கங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக ஏற்கனவே அழிக்கப்பட்ட அல்லது அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாக இனிமேல் அழிக்கப்படவிருக்கும், வீட்டுரிமையாளர்கள், தமக்கென சொந்த வீடுகள் எதுவும் இல்லாத குடும்பஸ்தர்கள் ஆகியோர் இவ்வீடுகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாளை 25ம் திகதி இவ்வீடுகளுக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதியாகும். (அ)

## புதிய விஞ்ஞான கூடம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வு கூடத்தை இம்மாதம் 26-ந் தேதி முல்லைத்தீவு பாராளுமன்ற உறுப்பினர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு திறந்து வைப்பார்.

மகாவித்தியாலய அதிபர் திரு பி. இராசேந்திரம் தலைமையில் கலைவிழாவும் இடம் பெறுகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம் அரசின் சிறு உதவியுடன் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கட்டி முடித்துள்ளது.

## தடை உத்தரவு ரத்தானது

(சங்கானை)

வலி மேற்குப் பகுதியில் சங்கானையில் உள்ளமரக் கூட்டுத்தாபனத்தின் விறகுகாலை மூலம் பொது மக்களுக்கு வீடு கட்டும் மரங்கள் விநியோகம் செய்யக்கூடாதென தற்காலிகமாக விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது

இப்பகுதி பாடசாலைகளின் தேவைக்காகவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தத் தடை உத்தரவை வடபகுதி வனபரிபாலன அதிபர் திரு பொன்னம்பலம் தமது கடிதமூலம் சம்பந்தப்பட்ட டிப்போ முகாமையாளருக்குத் தெரிவித்துள்ளார்.

## ★ தமிழ்நாட்டில் நேற்று நடைபெற்ற ஹர்த்தால்:

# "ஒரு நாள் 'பந்த்' படுதோல்வி"

---அரசுக் குறிப்பு

# "வேலைநிறுத்தம் பூரண வெற்றி"

---எதிர்க் கட்சிகள்

(சென்னை)

**சில எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் தமிழ்நாட்டில் நேற்று மேற்கொண்ட ஒருநாள் ஹர்த்தால் (பந்த்) படுதோல்வி அடைந்ததாகவும், தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் சகஜநிலை காணப்பட்டதாகவும் தமிழக அரசு உயர் அதிகாரி ஒருவர் நேற்று மாலை பத்திரிகைகளுக்கு விடுத்த உத்தியோகபூர்வமான குறிப்பொன்றில் தெரிதுள்ளார்.**

**அதே நேரத்தில்; நேற்றைய வேலைநிறுத்தம் முழுவெற்றி என்றும், தமிழக அரசின் அடக்குமுறையையும் மீறி தொழிலாளர்கள் தங்களது ஒருமைப்பாட்டைக் காட்டிவிட்டனர் என்றும் எதிர்க்கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.**

நேற்றைய ஹர்த்தால் குறித்து தமிழக அரசுசார்பாக நேற்றுமாலை வெளியிடப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''தமிழ்நாட்டில் சில எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் மேற்கொண்ட ஒருநாள் ஹர்த்தால் தோல்விகண்டது. தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் சகஜநிலை காணப்பட்டது. பஸ்சேவைகள் வழக்கம்போல நடைபெற்றது. சிறிய கடைகள் பெரும் வர்த்தக நிலையங்களில் வழமை போல் வியாபாரம் நடைபெற்றது.

''பஸ்கள் மீது கல்வீச்சு போன்ற சிறு சிறு சம்பவங்களைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை'' என்று அரசுக் குறிப்புக் கூறியது.

பெரும் தொழிற்சாலைகளில் எல்லாம் வேலைகள் வழமை போல் நடைபெற்றபோதிலும் சென்னையில் மூன்று தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் நடைபெற்றது.

### பலர் கைது

இராமநாதபுரத்தில் ரயில் பாதை ஒன்றில் 'பிஷ்பிளேட்' அகற்றப்பட்டதால் ரயில் சேவை ஓரளவு பாதிக்கப்பட்டது முன் எச்சரிக்கையாக 812பேர் இங்கு கைதுசெய்யப்பட்டனர். மதுரையில் நேற்று பூரண அமைதி நிலவியது. முன்நடவடிக்கையாக இங்கு 1000 பேர் கைதுசெய்யப்பட்டனர். சேலத்தில் ஹர்த்தால் அறிகுறிகளே காணப்படவில்லை ஆனலும் முன்எச்சரிக்கையாக இங்கு 500 பேர் கைது செய்யப்பட்டு காவலில்வைக்கப்பட்டனர். தஞ்சாவூரில், தி. மு. க, பாரத கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியதைக் கலைக்க பொலிஸார் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் நடத்தி இறுதியில் வானை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடந்தினர். இதில் ஆறு பொலிஸார் காயமடைந்தனர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 20 பேர் காயமடைந்தனர்.

### எதிர்க்கட்சியினர் அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திரு. எம். கல்யாணசுந்தரம் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் அரசுமற்றும் பொலிசாரின் பயமுறுத்தல்களுக்கு எதிராக வேலை நிறுத்தம் முழுவெற்றி பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்

தமிழக சட்டசபை எதிர்க்கட்சித்தலைவர் நேற்று மாலை விடுத்த அறிக்கையில், அரசின் அடக்குமுறை தீவிரமாக இருந்தபோதிலும், நேற்றைய வேலைநிறுத்தம் பூரணவெற்றி அளித்துள்ளதென்று குறிப்பிட்டுள்ளார்.

## இன்று

[யாழ்ப்பாணம்[

ஐ. நா. யாழ் கிளையும், யாழ். லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து நடாத்தும் ஐ.நா. தினவிழா இன்றுமாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. டாக்டர் ஹோம்ஸ் சிறப்புரையாற்றுவார். விழாவினையொட்டி; பொது நூலகத்தில் விளக்கப் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். [செ]

## பதவியை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எமது இயக்கம் எப்லமத் தடுக்கின்றது ஒரு தொகுதிக்கு உரிமையான பரவலாக்கப்பட்ட நிதிஒதுக்கீட்டின்படி கிடைக்கின்ற பணத்தை கல்விக்கோ, நீர்ப்பாசனத்திற்கோ, நெடுஞ்சாலைகளுக்கோ, சுகாதாரத்திற்கோ, மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கோ முறையான முக்கியத்துவம் கொடுத்து ஒதுக்கீடு செய்கின்ற பொறுப்பும் தொகுதிப்பிரதிநிதியின் கையில் இருந்து பறிக்கப்பட்டுள்ளது.

''உதவிகோரி நாம் விடுத்த கோரிக்கைகள் எதையும் எமது இயக்கம் இதுவரை நிறைவேற்றவில்லை, பல ஆண்டுகளுக்கு முன் குடியேற்றத்திற்கென காணிக்கச்சேரிகள் வைத்து வவுனியா மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட நிலங்களில் எவரும் இதுவரை குடியேறவில்லை. எமது தொகுதியில் வாழ்கின்ற மக்களும், நானும் மாத்திரம் எமது பிரதேசத்தைக் காக்கவேண்டும் என்று சிந்திப்பதில் அர்த்தமில்லை. எமது இயக்கத்தைப் பொறுத்தவரை நான் அறிந்த அளவில் தமிழ்மக்களின் பிரதேசம் காப்பாற்றப்படுவதற்கு எந்தவித திட்டமோ, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவுமோ இதுவரை எடுக்கப்படவில்லை.

''எமது பிரதேசத்தைக்காப்பாற்ற முடியாதநிலையில் எமது மாவட்டத்தின் அத்தியாவசிய முன்னேற்றங்களில் பங்கெடுத்து உழைக்கமுடியாத நிலையில் எல்லைப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் அவலக்குரலும் எந்தவிதவகையிலும் இயக்கத்தின் உதவியுடனே, அல்லது அதிகார பலத்துடனே ஏற்ற நடவடிக்கை எடுத்துஉதவமுடியாத நிலையில்-ஒரு தொகுதியின் பிரதிநிதி என்ற வகையில் வெறும் செயலற்ற பொம்மையாக இருப்பதிலும் பார்க்க பதவியைத் துறந்து தமிழ்மக்களோடு ஒருவனக, வருகின்ற இன்னல் அத்தனையையும் ஏற்று வாழ்வதேசிறந்ததென்ற முடிவிற்கு தள்ளப்பட்டுள்ளேன். எனது தொகுதி மக்களுக்கு சில பல விளக்கங்களை தெளிவாகக் கொடுக்கவேண்டிய பொறுப்பு எனக்குண்டு. இந்த முயற்சியை வெகுவிரைவில் நிறைவேற்றிவைக்க எத்தனிக்கின்றேன்.''

---

### மன்னாரில் கட்டாயத்தின்பேரில்

# குடிபெயர்ந்த குடும்பங்களை யாழ். எம். பி. சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் கட்டாயத்தின்பேரில் குடிபெயர்ந்துள்ள சுமார் 150 குடும்பங்களை, யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நேரில் பார்வையிட்டு, அவர்கள் பிரச்னைகளை அறிந்துகொண்டார்.

இவர்கள் குடியிருந்த நிலம், இராணுவத்தினரின் துப்பாக்கிப் பயிற்சிக்காக அரசினல் சுவீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் குடிபெயர்ந்து செல்லவேண்டியநிலை ஏற்பட்டது.

### அகதிகளாகத் தஞ்சம்

இக்குடும்பங்கள் தற்போது மடுமாதா கோவில் பகுதியில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்கள் குடியிருந்த நிலங்களில் பெருமளவில் பணம் செலவிட்டிருப்பதாகவும், வீடு கிணறு கட்டப்பட்டிருப்பதாகவும், அவர்கள் யாழ்ப்பாண எம். பி யிடம் தெரிவித்தனர். (க-அ)

## கோப்பாய் எம். பி. ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறர். அவரைச் சந்திப்பதற்கு பார்வையாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சுகயீனமுற்று தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறர் என நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி தவறானதாகும்.

## யாழ். அபிவிருத்தி திட்டங்கள்

28-ல் கலந்துயைராடல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் என்னும் பொருள் பற்றி கொன்சன்ரன் இ அன் பிரன்ஸ் அன் டெவலப்மெண்ட் லிமிட்டட் கம்பெனி அதிபர் திரு. சி.லோகநாதன் யாழ். றிம்மர் மண்டபத்தில் இம்மாதம் 28-ம் திகதி மாலை உரை நிகழ்த்துவார். அதன்பின்னர் கலந்துரையாடல் இடம் பெறும். [க]

## மூவரும் வேலைநீக்கம்

(பண்டத்தரிப்ப)

தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், கைத்தொழில் முகாமையாளர், உள்துறை கணக்காளா ஆகியோரை வேலைநீக்கம் செய்வதென இயக்குநர்சபை ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

பண்டத்தரிப்பு ப. நோ கூ. சங்க தலைவரும், வலிமேற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இயக்குனர்சபை கூட்டத்தில் இம்மூவரையும் பதவி நீக்குவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் நலன்களுக்கு விரோதமாக நடந்து கொண்டதாக இம்மூவர் மீதும் குற்றம்சாட்டி சங்க நிர்வாகத்தினல் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி அண்மையில் நடாத்திய விசாரணைகளில் குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதின் காரணமாக இவர்களை பதவிகளிலிருந்து நிரந்தரமாக வேலைநீக்கம் செய்வது என்று ஏகமனதாக இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது. [க]

---



## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம் ஒட்டுமடம் வீரசிங்கம் சச்சிதானந்தன் (C.I C.) காலமானர். இவர் மனேன்மணியின் அன்புக்கணவரும், பகிரதன், சசிதரன் (யா. இ. க) சாமினி, பாமினி (யாழ். கொன்வென்ட்) ஆகியோரின் அன்புத்தந்தையும், மகேஸ்வரன் (C. W. E.), பஞ்சனந்தன் (Survey Dept) ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகரத்தினம் (தலைமை தபால்கந்தோர்) கிருஷ்ணபிள்ளை (C. G. R) சேனதிராசா (Irrigation Dept குணரத்தினம், ஜகதீஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும், ஆ. பொன்னையாவின் மருமகனும் ஆவார். பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை இரண்டுமணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். 0648

## மரண அறிவித்தல்

### க. திருநாவுக்கரசு

அராலி வடக்கைச் சேர்ந்த க, திருநாவுக்கரசு காலமாகிவிட்டார், இவர் சொர்ணத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீகரனின் [U K] அன்புத் தந்தையும், சந்திராவின் மாமனும், சுப்பிரமணியம் [ஜே பி], காலஞ்சென்ற தில்லைநாதன், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி நடராஜா ஆகியோரின் சகோதரனுமாவார அன்னரது ஈமைக்கிரியைகள் இன்று [24-10-78] செவ்வாய்க்கிழமை மாலை 2-00 மணியளவில் 'சிவகிரி' அராலி வடக்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அராலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (650



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 19, Telegram Eelanaadu, Telephone 389. Registered Newspaper in Srilanka